Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 01 வியாழக்கிழமை (17-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 225

# வடக்குக்கான கடல்வழிப்பாதையை கட்டுப்படுத்துவதற்கு புலிகள் முடிவு!

## கப்பல்கள் ராணுவ இலக்காக கருதப்படும் என எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 17

வடக்குக்கான கடல்வழிப் பாதைகள் அனைத்தையும் கட்டுப்படுத்த முடிவு செய்திருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். வடக்கே செல்லும் கப்பல்கள் அனைத்தும் இராணுவ இலக்குகளாகக் கருதப்படும் என விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகம் விடுத்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் ஏனைய பொருள்களையும் கொண்டு செல்வது என்ற போர்வையில் அரசாங்கம் போர் சம்பந்தமான பொருள்களைகொண்டு செல்வதாக புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் இருந்து பயணிகளை ஏற்றி வருவதற்காக அமர்த்தப்பட்ட பயணிகள் கப்பலான ''மிசென்'' கடலில் வைத்து எரிக்கப்பட்டது—

பருத்தித்துறையில்பொருள்களை இறக்கிவிட்டு புறப்பட்டுச் சென்ற வடகொரிய கப்பலான 'மொறாங்பொங்' வெற்றிலைக் கேணிக் கடற் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டது— ஆகிய சம்பவங்களை அடுத்து வடபகுதிக்கான பயணிகள் மற்றும் சரக்குக்கப்பல்சேவைகள் பாதிக்கப்பட்ட நிலையில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரி மீது ஷெல்! ஊழியர் உட்பட 4 பேர் பலி!

### அக்கராயன் குளத்தில் சம்பவம்

வவுனியா, ஜூலை 17

கிளிநொச்சி முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு ஏவப்பட்ட ஷெல் ஒன்று அக்கராயன் குளம் ஆஸ்பத்திரியில் வீழ்ந்து வெடித்ததில் வைத்தியசாலை ஊழியர் உட்பட 4 பேர் உயிரிழந்தனர். பதில் சுகாதார வைத்திய அதிகாரி உட்பட 6 பேர் காயமடைந்தனர்.

வைத்தியசாலை ஊழியரான அந்தோனி கணபதி (47 வயது), அந்தோனி இராமன் (70 வயது), கணபதி தேவகௌரி (40 வயது), உமாசங்கர் (12 வயது) ஆகியோரே இறந்தவர்களாவர்

பதில் வைத்திய அதிகாரி மகாலிங்கம் செந்தில்நாதன் (40 வயது), கணபதி கமலவதனி (16 வயது), க. வேதகுமார் (25 வயது), ஆ. கறுப்பன் (56 வயது), த. குருசாந்தி (60 வயது), த. மகேஸ்வரி (29 வயது) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

அக்கராயன் ஆஸ்பத்திரிக்கும் சேதம் ஏற்பட்டது.

(இ-3-164)

## செஞ்சிலுவை சர்வதேசகுழு - ஐ.நா. உதவியை அரசாங்கம் கோருகிறது

கொழும்பு, ஜூலை 17

வடபகுதிக்கான சரக்கு மற்றும் பயணிகள் கப்பல் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க கப்பலுக்கு வழித்துணை வழங்குமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவற்றை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் திணைக்கள மேலதிகச் செயலாளர் எம். ஏ. ரபீக் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் சென்ற வடகொரியக் கப்பலான 'மொறாங்பொங்' விடுதலைப் புலிகளால் கடந்த 2 ஆம் திகதி கடத்தப்பட்டதையடுத்து பயணிகள் மற்றும் சரக்குக் கப்பல்கள் தமது சேவைகளை நிறுத்திக் கொண்டன என்றும் —

தமது சேவைகளை மீள ஆரம்பிக்கக் கடற்படைப் பாதுகாப்பு வேண்டும் என்று அவை கோரியுள்ளன என்றும் — அவர் தெரிவித்தார்.

கடற்படைப் பாதுகாப்பு வழங்க் நாம் ஆவன செய்த போதும் கப்பல் நிறுவனங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்திமுரளி



அப்ப தரை வழிப் பாதை பிரச்சினை போய் கடல் வழிப் பாதைப் பிரச்சினை வந்திருக்குப் போல...!

## கிளைமோர் கண்ணித் தாக்குதலில் 7 படையினர் பலியாகினர்

கொழும்பு, ஜூலை 17

வீதித்துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் 7 படையினர் உயிரிழந்தனர். இரண்டு படையினர் காயம் அடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7.45 மணி அளவில் கொடிகாமப் பகுதியில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த படையினர் பலாலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

(இ21-3)

## புலிகளுடன் பேச்சு நடத்தியபின்பே செஞ்சிலுவைக்குழு முடிவு செய்யும்

கொழும்பு, ஜூலை 17

''வடக்குக்கான கப்பல்களுக்கு வழித்துணை வழங்குவது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திய பின்பே முடிவு செய்ய முடியும்''

மேற்கண்டவாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என தனியார் வானொலி ஒன்று தெரிவித்தது.

வடக்குக்கான கப்பல் சேவையை நடத்துவது தொடர்பாக இலங்கை அரசாங்கம் விடுத்துள்ள கோரிக்கை தொடர்பாக ஜெனிவாவில் உள்ள சர்வதேசக் குழு தலைமையகத்தில் ஆராயப்பட்டுவருவதாகவும் —

இந்த விடயத்தில் தமது அமைப்பு ஈடுபடுவது என்று முடிவு செய்யும் பட்சத்தில் அடுத்ததாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படும் என்றும் — செஞ்சிலுவை அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-21-164)

## வன்னியில் அடுத்த நகர்வுக்கான ஆயத்த வேலைகளில் படையினர்

கொழும்பு, ஜூலை 17

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையின் போது ஓமந்தையில் இருந்து முன்னேறிய 55 ஆவது படையணி பெரும் உயிர்ச் சேதங்களையும், ஆயுத தளபாட இழப்புக்களையும் சந்தித்துள்ளது அந்த இழப்புகளுக்கு ஈடுசெய்யும் வகையில் படையினரும், புதிய ஆயுதங்களும் அனுப்பப்பட்டு நிலைகள் பலப்படுத்தப்பட்ட பின்னரே அடுத்த நகர்வு ஆரம்பிக்கும்.

படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு செய்தி வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

55 ஆவது படையணி மீது விடுதலைப் புலிகள் இரு தடவைகள் மேற்கொண்ட தாக்குதல்களையடுத்து 19 அதிகாரிகள் உட்பட 400 படையினர் உயிரிழந்துள்ளனர். 76 அதிகாரிகள் உட்பட ஆயிரத்து 750 படையினர் காயமடைந்துள்ளனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையிலும் நெடுங்கேணியிலும் விடுதலைப் புலிகள் பீரங்கி தாக்குதல்

கொழும்பு, ஜூலை 17

ஓமந்தையிலும், நெடுங்கேணியிலும் படையினரின் நிலைகள் மீது புலிகள் நேற்றுப் பீரங்கித் தாக்குதல் நடத்தினர்.

படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் 45 நிமிட நேரம் பலத்த சண்டை நடந்தது என்றும் —

இச்சண்டையில் 4 படையினர் உயிரிழந்தனர் என்றும் 8 படையினர் காயமடைந்தனர் என்றும் —

புலிகள் தரப்பில் நால்வர் [illegible] காப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ -3)

## தமிழர் வீடுகளில் உள்ளோர் பற்றிய விவரம் அறியப் படிவம்

### வெள்ளவத்தையில் விநியோகம்

கொழும்பு, ஜூலை 17

வெள்ளவத்தைப் பகுதியில் தமிழர் வீடுகளில் உள்ளவர்களின் விவரங்களைச் சேகரிக்கும் படிவங்கள் நேற்று பொலிஸாரால் விநியோகிக்கப்பட்டன.

இந்தப் படிவங்களைப் 'போட்டோ' பிரதி செய்து இன்று நண்பகல் 12 மணிக்கு முன் வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதையடுத்து வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள போட்டோப் பிரதி செய்யும் நிலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீர் வழங்கல் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்கள்

## வேலணையில் ஆரம்பித்து வைப்பு

வேலணையில் நேற்று பல திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வேலணைக்கான குடிதண்ணீர் வழங்கும் திட்டம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதன்பின்னர் கால்நடை வைத்திய நிலையம், பொலீஸ் நிலையம் ஆகியன திறந்து வைக்கப்பட்டன.

கால்நடை வைத்திய நிலையத்தை பிரிகேடியர் மெண்டிஸ் திறந்து வைத்தார்.

ஜேர்மன் தொழில் நுட்ப கூட்டுத்தாபன அதிகாரி ஸ்ரெபன்ஸ் குடிதண்ணீர் திட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

பொலீஸ் நிலையத்தை யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி திறந்து வைத்தார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் தண்ணீர் பௌசரை வேலணை உதவி அரசாங்க அதிபர் எஸ். தில்லைநாதனிடம் அந்த அமைப்பு பிரதிநிதி கையளித்தார்.

அங்கு இடம்பெற்ற வைபவத்தில் யாழ். மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி திருமதி ஜி சிவபாதசுந்தரம், ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் எல். ஜே. செல்வநாயகம், வேலணை உதவி அரசாங்க அதிபர் எஸ். தில்லைநாதன், நீர் வடிகால் சபை அதிகாரி யேசுதாசன் ஆகியோர் உரை ஆற்றினர். (இ-111)

## பரிசளிப்பு

கல்வயல் இந்து இளைஞர் மன்றத்தினரின் திருவாசக வினா விடைப் போட்டிக்கான பரிசளிப்பு வைபவம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் நடைபெறும். (ஐ-100)


## மகளிர் அபிவிருத்தி நிலையம்

நடத்தும்

## மனைப்பொருளியல் கண்காட்சி

யாழ்/ இந்து மகளிர் கல்லூரியில்
ஜூலை 18, 19 ஆம் திகதிகளில்
காலை 9. 00- 17. 00 மணி வரை நடைபெறும்.

**KATE GORDON**
Associate Field Officer, UNHCR
அவர்கள் கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இராஜேஸ்வரி சண்முகரட்ணம்
உதவிக் கல்விப் பணிப்பாளர் (மனைப் பொருளியல் பிரிவு) பயிற்சியை நிறைவு செய்த மாணவிகளுக்கு
**19—07—97** அன்று சான்றிதழ்கள் வழங்குவார்.
யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பணிப்பாளர், ஆசிரியர். மாணவிகள்,
07, இரத்தினம் லேன்,
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(48431)



## கோண்டாவில் பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

சகல அங்கத்தவர்கள் கவனத்திற்கு

கோண்டாவில் பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தில் இவ் வருட இறுதியில் கிளைக் குழு தேர்தல் நடைபெறவுள்ளதால் தங்களது பங்கினை முழுமையாக எதிர்வரும் 31 - 07 - 97 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

வ. இரத்தினசிங்கம்
தலைவர்

செ. செல்வராசா
செயலாளர்

(47333)



## ஆசிரியர் சேவை வகுப்பு- I பரீட்சை கல்விக் கருத்தரங்கு

விடயம்: பொது அறிவு வினாத்தாள்
விரிவுரை வழங்குபவர்: திரு. S. குமாரவேல்
காலம்: **18-07-1997 வெள்ளிக்கிழமை**
காலை 9-30 மணி (புதிய நேரம்)
இடம்: கொக்குவில் இந்துக்கல்லூரி
ஆசிரியர்கள் கலந்து பயன் பெறுமாறு வேண்டுகிறோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி.

(47334)



## கண்ணீர் அஞ்சலி

நீண்ட காலம் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் எமது கல்லூரியில் அரும்பணி புரிந்து ஓய்வு பெற்ற

**உயர்திரு. நடராசா சிவராசா BSc.**

அவர்கள் கொழும்பில் சிவபதம் அடைந்ததை அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அமரரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
யா/ நடேஸ்வராக் கல்லூரி.

(சி/1138)


# பம்பலப்பிட்டியில் கைதானோரில் 12 பேர் தொடர்ந்து தடுத்து வைப்பு

பம்பலப்பிட்டிப் பொலீஸாரால் திங்கட்கிழமை இரவு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 360 பேரில் 12 பேர் மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பம்பலப்பிட்டியில் உள்ள 15 விடுதிகளை ஏக காலத்தில் சுற்றிவளைத்த பொலீஸார் 360 பேரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

இவர்கள் உடனுக்குடன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு படிப்படியாக விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை — அன்றைய தினம் தெகிவளையில் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர் என பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

# அரசியல் தீர்வு ஏற்படாவிட்டால் மேலும் பல சக்திகள் போராடலாம்

## மட்டக்களப்பு கூட்டத்தில் புளொட் எம். பி. எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 17

''வடக்கு — கிழக்கு இணைப்பு உட்பட தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படாவிட்டால் யுத்தம் தொடரும். இன்று விடுதலைப் புலிகள் போராடுகிறார்கள். ஆக்கபூர்வமான அரசியல் தீர்வு ஏற்படாவிட்டால் நாளை மேலும் சக்திகள் போராட வேண்டிய நிலை ஏற்படும்''

புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் மட்டக்களப்பில் நேற்று நடந்த வீரமக்கள் தினக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபை பிரதி மேயர் பெனடிக் தனபாலசிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மேலும்அவர் கூறியதாவது:-

இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவான போது தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறும் எனக் கருதினோம். இந்த நம்பிக்கையின் பேரில் ஆயுதங்களைக் கையளித்தோம். தீர்வுக்கான அடித்தளமாக இந்த ஒப்பந்தத்தைக் கருதினோம். இறுதியில் எல்லோரும் ஏமாந்தோம்.

83 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரத்தால் ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்றது.

ஆனால் தமிழ்க் குழுக்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகள், கொலைகள் காரணமாகப் போராட்டம் பலவீனப்பட்டது.

ஜனாதிபதி அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்வைத்துள்ளார். இத்தீர்வுத் திட்டம் சட்ட வடிவம் பெறுமா என்பதே சந்தேகமாக இருக்கிறது.

ஈழப் போரில் இறந்தவர்களின் தியாகங்கள் அர்த்தம் பெற வேண்டுமானால் உரிய தீர்வு கிடைக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

ஈ. பி. டி. பி. மற்றும் ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்புப் பிரதிநிதிகளும் கூட்டத்தில் உரையாற்றினர். (இ-3-21)

## சமய நிகழ்ச்சிகளில்

தென்மராட்சி, ஜூலை 17

புலோலி மேற்கு அவ்வோலைப் பிள்ளையார் ஆலய வைரவர் கோயில் வருடாந்த வேள்வியும், பொங்கலும் இன்று நடைபெறவுள்ளன. (ஐ-15)

### மரியாயின் சேனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

சுண்டுக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலயப் பங்கில் உள்ள 'மரியாயின் சேனை' ஆண்களுக்கான வாராந்தக் கூட்டம் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் மாலை 4. 30 மணிக்கு, தலைவர் எம். எஸ். தேவதாஸ் தலைமையில் நடைபெற்று வருகிறது. (ஐ-15)

### ச. ச. நிலையம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

பருத்தித்துறை தும்பளை தெற்குப் பகுதியில் அமைந்துள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையம் மீண்டும் செயல்பட ஆரம்பித்துள்ளது.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால், அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்ததால், சனசமூக நிலையம் செயற்படாமல் இருந்து வந்தது. தற்போது மக்கள் அப்பகுதியில் மீளக்குடியேறியதை அடுத்து அந்தச் சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டு [illegible] செயற்பட ஆரம்பித்துள்ளது. (ஐ-15)

## லெப்டினன்ட் மரணம் தொடர்பாக

# 6 படையினர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்

தம்மோடு கடமையாற்றி வந்த இராணுவ லெப்டினன்ட் ஒருவரின் மரணம் தொடர்பாக சந்தேகத்தில் கைதான ஆறு இராணுவத்தினரை சாவகச்சேரி பொலீஸார் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

பி. சந்திரதாஸ என்பவரே இறந்தவர் ஆவர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டவர்களில் மூன் லெப்டினன்ட்டுகளும், இரண்டு இரண்டாம் லெப்டினன்ட்டுகளும் ஒரு சிப்பாயும் அடங்குவர்.

இந்த மரணம் கடந்த 13 ஆம் திகதி புதன்கிழமை மிருசுவில் உஷனில் உள்ள படை அதிகாரிகள் விடுதியில் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

கஜபா படையணியின் 8 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பிரஸ்தாப அதிகாரிகள் விடுதியில் விருந்து நடைபெற்றதாகவும்—

பதவி உயர்வு பெற்ற பிரஸ்தாப படை அதிகாரிக்கு சக படையினர் பலவந்தமாக மதுவை பருக்க முயன்ற போது அவரின் தலை சுவரில் மோதுண்டது என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி எஸ். ஏ. ஈ. ஏகநாதனின் பணிப்புரையின் பிரகாரம் சாவகச்சேரி பொலீஸாரின் அனுசரணையுடன் சாவகச்சேரி திடீர் மரணவிசாரணை அதிகாரி நா. தர்மேந்திரர் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தியிருந்தார்.

சாவகச்சேரி பொலீஸ் நிலைய உதவி பொலீஸ் அத்தியட்சகர் விக்கிரமநாயக்கா, உதவி பொலீஸ் இன்ஸ்பெக்டர் திஸநாயக்கா, மேஜர் திவுல்வேவ, கப்ரின் பமுனுசிங்க ஆகியோர் சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

மரண விசாரணையின் பின்னர் கொழும்பு பெரியாஸ்பத்திரி சட்ட வைத்திய அதிகாரியினால் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு பரிசோதனை அறிக்கை கிடைக்கும்வரை தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டு சந்தேகநபர்கள் யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர். (இ-5-15-117)

# தமிழ் தட்டச்சு இயந்திரம் விளையாட்டுப் பொருள்கள்

## மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு தமிழ் தட்டச்சுஇயந்திரம் ஒன்றையும், விளையாட்டுப் பொருள்களையும் 513 பிரிகேட் தளபதியான கேணல் டியூ முனசிங்க நேற்றுக் கையளித்தார்.

நேற்றுக் காலை கல்லூரியில் நடந்த வைபவம் ஒன்றில் வைத்து கல்லூரி அதிபர் எஸ். கேசவராஜனிடம் அவர் கையளித்தார்.

படையினரின் சேமநலனுக்காக வழங்கப்படும் நிதியில் இருந்து இப்பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படுவதாக கேணல் டியூ முனசிங்க தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் உடுவில் பிரிவு சிவில் நிர்வாக அதிகாரி லெப்டினன்ட் சூரிய பண்டாராவும் பங்குபற்றினார். (இ-3)

## புலிகளால் விடுவிக்கப்பட்ட

# வடகொரிய மாலுமிகள் கொழும்பில் தவம் கிடப்பு

கொழும்பு, ஜூலை 17

விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்ட வடகொரிய கப்பலின் மாலுமிகள் சொந்த நாட்டுக்கு திரும்ப முடியாத நிலையில் கொழும்பில் தவம் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களை வடகொரியாவுக்கு அழைத்துச் செல்ல புதுடில்லியில் உள்ள கொரிய தூதரகத்தில் இருந்து வந்த அதிகாரிகள் திரும்பிச் சென்றுவிட்டனர்.

மாலுமிகளின் பயண ஆவணங்கள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தாலேயே இவர்களின் பயணம் தாமதமாவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனை நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ... நூலகம்.

பொதுப் பிரச்சினைகளில்

# ஜெயலலிதா- வை.கோ.

# சேர்ந்து செயற்பட முடிவு!

சென்னை, ஜுலை 17

தமிழ் நாட்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் (அ. தி. மு. க), மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் (ம. தி. மு. க) சேர்ந்து கூட்டணி அமைத்துள்ளன.

அ. தி.மு.க வின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவும், ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமியும் நேற்று முன்தினம் சென்னையில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

அ. தி. மு. கட்சித் தலைமையகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பின் போது ஜெயலலிதாவுடன் முன்னாள் அமைச்சர் நெடுஞ்செழியனும் கலந்து கொண்டார்.

இச் சந்திப்பைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் மக்களைப் பாதிக்கும் விலைவாசி உயர்வு, பொதுவிநியோக முறையில் உள்ள குறைபாடுகள், காவிரி நீர்ப் பிரச்சினை போன்ற பொதுப் பிரச்சினைகளில் இந்த இரு

உலக அரங்கில்

கட்சிகளும் இணைந்து போராட்டம் நடத்தும் என்று வை. கோபாலசாமி அறிவித்தார்.

இந்த சந்திப்பு இருகட்சிகளுக்கும் இடையே தேர்தல் கூட்டணி ஏற்பட வழி சமைத்திருப்பதாக செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

குன்னூரில் நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் ம. தி. மு. க வின் ஆதரவுடன் தமது கட்சி போட்டியிடும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## கொரிய எல்லையில் சண்டை!

சோல், ஜுலை 17

தென் கொரியப் படையினரின் எல்லைக் காவல் நிலையம் ஒன்று நேற்றுக் காலை வட கொரியப் படையினரின் தாக்குதலுக்கு இலக்கானது.

இதனையடுத்து இருநாட்டுப் படையினருக்கும் இடையேசுமார் 15 நிமிட நேரம் சண்டை இடம் பெற்றதாகத் தெரிவிக்கப் படுகிறது

வட கொரியத் துருப்பினர் நால்வர் எல்லை தாண்டி தென் கொரியக் குடாவுக்குள் ஊடுருவ முயன்றபோது தென் கொரியப் படையினர் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்ததாகவும் அதனையடுத்து வட கொரியப் படையினர் ஆட்லறி ஷெல் தாக்குதலை நடத்தியதாகவும் தென் கொரிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

சண்டையின் பின்னர் அம்புலன்ஸ் வண்டி ஒன்று வட கொரிய படைத் தளத்துக்குச் சென்று திரும்பியதை தென் கொரிய எல்லைக் காவற் படையினர் கண்டுள்ளனர்.

## 'ஆசியான்' பிரதிநிதிகள் சிஹானுக்கைச்சந்திப்பர்

நொம்பென், ஜுலை 17

'ஆசியான்' வெளியுறவு அமைச்சர்கள் கம்போடியாவின் நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் மன்னர் சிஹானுக்கை சந்திப்பதற்காக நேற்று சீனத் தலைநகர் பீஜிங் சென்றனர். மன்னர் சிஹானுக்கை அவர்கள் இன்று சந்திப்பர்.

கம்போடியாவின் இரண்டு பிரதமர்களையும் சந்தித்துப் பேச அவர்கள் விரும்புகின்றனர்: தாய்லாந்து, பிலிப்பீன்ஸ், இந்தோனேஷியா ஆகியவற்றின் வெளியுறவு அமைச்சர்களையே 'ஆசியான்' பீஜிங்கிற்கு அனுப்பியுள்ளது.

4 ஆண்டுக்கு முன்பு நடைபெற்ற தேர்தலின் விளைவாக கம்போடியாவில் ஹுன்செனின் மக்கள் கட்சியும் இளவரசர் றணரித்தின் கட்சியும் கூட்டரசினை அமைத்தன. தற்போதைய நெருக்கடியில் றணரித்தின் படையினர் தலைநகரைவிட்டு விரட்டியடிக்கப்பட்டனர்.

(ஐ-5)

# மே மாதம் தேர்தல் என்கிறார் ஹுன் சென்

நொம்பென், ஜுலை 17

கம்போடியாவில அடுத்த ஆண்டு மே மாதம் தேர்தல் நடத்தப்படும் என்று அதிகாரத்தில் உள்ள இரண்டாவது பிரதமர் ஹுன் சென் அறிவித்துள்ளார்.

ஐ. நா. சபையின் ஏற்பாட்டில் கடந்த 5 வருடங்களுக்கு முன்பு இரு பிரதமர்களிடையேயும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின்படி 1998 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி கம்போடியாவில் பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இத் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்தப்பட வேண்டும் என்பதே சகலரினதும் எதிர்பார்ப்பாகும் என்று பிரதமர் ஹுன் சென் கடந்த ஞாயிறன்று விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மோதலின் மத்தியிலும் ஜனநாயகத்துக்குச் சார்பான கருத்துக்களை ஹுன் சென் வெளியிட்டு வருவது குறித்து அமெரிக்கா மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. (ஐ)

## வாக்கெடுப்பில் லாலுவின் அரசு வெற்றி

புதுடில்லி, ஜுலை 17

பீஹாரில் லாலு பிரசாத் யாதவ்வின் ராஷ்ரிய ஜனதாதள் அரசு மாநில சட்டப் பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது

169 வாக்குகள் யாதவ்விற்கு ஆதரவாக கிடைத்தன. ஒரு வாக்குக் கூட அவருக்கு எதிராகப் பதிவாகவில்லை. காங்கிரஸ்கட்சி வாக்களிப்பில் இருந்து விலகிக்கொண்டது. ஏனைய எதிர்க் கட்சிகளும் இதில் வாக்களிக்கவில்லை.

சட்டப்பேரவை நேற்று முன்தினம் காலையில் கூடிய சிலநிமிடங்களில் ஒத்தி வைக்கப்பட்டது. எதிர்க்கட்சியினர் பலரும் லாலு பிரசாத்யாதவ் தமது பதவியை இராஜினாமாச் செய்து விட வேண்டும் என்று கோஷமிட்டவாறு சபை அலுவல்கள் நடைபெறாமல் தடுத்துவிட்டபடியால் சட்டப்பேரவைக் கூட்டம் மதிய உணவு நேரம் வரை ஒத்திவைக்கப்பட்டது.

(ஐ 5)

யா|சிதம்பரக் கல்லூரி
வல்வெட்டித்துறை
வருடாந்த பரிசளிப்பு விழா - 1997

நாள்:- 18 - 07 - 97
இடம்:- கல்லூரி மண்டபம்
நேரம்:- பிற்பகல் 2.00 மணி

பிரதம விருந்தினர்
கு. பிறேமகாந்தன் (இ.க.நி.சே II) அவர்கள்
(உதவிக் கல்விப்பணிப்பாளர், யாழ். வலயம் 2)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.
ப. மா. சங்கம், ப. அ. சங்கம்.

(48425)

# றணரித் ஆதரவாளர்கள் 35 பேர் கம்போடியாவில் கோரக் கொலை!

## வெளிநாட்டு ராஜதந்திரிகள் தகவல்

நொம்பென், ஜுலை 17

கம்போடியாவில் அண்மையில் அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்ட முதலாவது பிரதமர் இளவரசர் றணரித்தின் ஆதரவாளர்கள் 35 பேர் காவலில் வைக்கப்பட்டிருந்த சமயம் கொலை செய்யப்பட்டிருப்பதாக நொம்பெனில் உள்ள வெளிநாட்டு இராஜ தந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரண்டாவது பிரதமர் ஹுன் செனின் படையினரால் இவர்கள் கொல்லப்பட்டதை அந்த வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் சிலர் கொல்லப்படுவதற்கு முன்னர் கடுமையாக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இளவரசர் றணரித்தின் சிரேஷ்ட உதவியாளர் ஒருவரின் மெய்ப்பாதுகாவலர்களாக இருந்த நால்வர் கொல்லப்படுவதற்கு முன் அவர்களின் கண்கள் தோண்டப்பட்டுள்ளன.

மரண தண்டனை விதிக்கப்பட்ட அனைவரும் இளவரசர் றணரித்தின் கட்சியுடன் தொடர்பு உடையவர்கள் என்று தெரிவிக்கப் படுகிறது.

இந்தக் கொலைகள் தலைநகர் நொம்பெனிலும் பிற மாகாணத் தலைநகரங்களிலும் நடந்துள்ளன.

கம்போடியாவின் முழுமையான அதிகாரத்தை ஹுன் செனின் ஆதரவுப் படையினர் கைப்பற்றிய பின்னர் பெரும் எண்ணிக்கையில் இடம் பெற்ற கைதுகள், கொலைகள் குறித்து விவரங்களைப் பெற முடியாத நிலை உள்ளதாக இராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

ஆனால் இந்தக் குற்றச் சாட்டுக்களை பிரதமர் ஹுன் சென் மறுத்துள்ளார்.

றணரித்தின் படைகளில் இணைக்கப்பட்டிருந்த 'கெமரூச்' கெரில்லாக்களை மட்டுமே தாம் கைது செய்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை தலைநகர் நொம்பெனில் ஹுன் சென் ஆதரவுப்படையினர் வீடு வீடாகச் சோதனை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## சுட்டுக் கொலை

வாஷிங்டன், ஜுலை 17

இத்தாலி நாட்டைச் சேர்ந்த நாகரிக வடிவமைப்பு கலைஞர் சியானி வாஸேஸ் என்பவர் அமெரிக்காவின் மியாமியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். (ஐ)

★ குண்டு வெடிப்புகளுக்கு

## அமெரிக்கா மீது கியூபா குற்றச்சாட்டு!

ஹவானா, ஜுலை 17

கியூபாவில் உள்ள பிரபலமான இரண்டு உல்லாசப் பயணிகள் தங்கும் ஹோட்டல்களில் கடந்த வார இறுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கு பின்னணியில் அமெரிக்கா உள்ளதாக கியூப அரசாங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

ஆனால் இக் குற்றச்சாட்டை மறுத்துள்ள அமெரிக்கா அதனை நிரூபிப்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் உள்ளனவா என்று கியூபாவிடம் கேட்டிருக்கிறது.

அமெரிக்க அரசினால் ஏவப்பட்ட ஒருவர் அல்லது சிலர் இக் குண்டு வெடிப்புச் செயலுக்கு காரணம் என்று கியூப உள்துறை அமைச்சு குற்றஞ்சாட்டியிருந்தது.

(ஐ)

கேள்விப்பத்திரம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு பிரேதங்கள் எடுத்து வழங்குவதற்கும், கழிவு உறுப்புக்களை அழிப்பதற்கும்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு கீழ் வரும் இடங்களில் இருந்து பிரேதங்கள் எடுத்து வந்து வழங்குவதற்கும், கழிவு உறுப்புக்களை அகற்றுவதற்கும் தகுதியான விண்ணப்பதாரிகளுடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு இடங்களிலிருந்து பிரேதம் எடுத்து வருவதற்கும், கழிவு உறுப்புக்களை அழிப்பதற்குமாக கூலிகள் தனித்தனியே தெளிவாக எழுதப்படவேண்டும்.

1. யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு பிரேதம் ஒன்றை எடுத்து வருவதற்கான கூலி.
2. மானிப்பாய் வைத்தியசாலையிலிருந்து யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு பிரேதம் ஒன்றை எடுத்து வருவதற்கான கூலி.
3. கைதடி வயோதிப இல்லத்திலிருந்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு பிரேதம் ஒன்றை எடுத்து வருவதற்கான கூலி.
4. யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து கழிவு உறுப்புக்களை எடுத்துச் சென்று அழிப்பதற்கான பொதி ஒன்றுக்கான கூலி.

குறிப்பு:

கழிவு உறுப்புக்கள் யாழ்ப்பாண மாநகரசபையினாலும் மற்றும் நாட்டின் பொதுச் சட்டத்திற்கு அமைவாகவும் அவற்றிற்கென குறித்து ஒதுக்கப்பட்ட இடத்தில் சுகாதாரத்திற்கு பங்கம் இன்றி அழிக்கப்படல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் நிதியாளர், யாழ். பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக வேனும் சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பிரேதங்கள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி:

31 - 07 - 97

- பதிவாளர்

(சி-1135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்துக்கு விசேட பாடங்களுக்கு அனுமதி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். பல்கலைக்கழகத்துக்கு 1996 - 97 ஆம் கல்வி யாண்டுக்கு விசேட பாடங்களுக்கு 116 பேர் அனுமதி பெற்றுள்ளனர்.

இவர்கள் இந்து நாகரிகம், நாடகமும் அரங்கியலும், வரலாறு, கலை, கிறிஸ்தவ நாகரிகம், புவியியல், சமஸ்கிருதம், மொழியியல் ஆகிய பாட நெறிகளுக்கு தெரிவாகியுள்ளனர்.

வயது குறைந்தோர், தேசிய புலமைபெற்றோர் ஆகியோருக்கான புதிய அனுமதிகள் விரைவில் வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக அனுமதி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

### இந்து நாகரிகம்

செல்வி எஸ். பாலகிருஷ்ணன், ரி. ஹேமமாலினி, கே. கஜேந்திரபிரபன், பி. மலர்விழி, எஸ். சிவரஞ்சன், எஸ். யுகந்தினி, ரி. விஜிதா, எம். காந்தமலர், பி. பிரசாந்தன், கே. கலைச்செல்வி. ரி. கங்காதேவி, செல்வி எல். குமாரசிங்கம், எஸ், மகிந்தினி. எம். நந்தினி, என், சதானந்தன், எஸ். சிவாஜினி, எஸ், சுதர்சன், ரி, தர்மவர்ணி, எம். விமலரஞ்சினி, கே. கோகுலதேவி, எம். கல்யாணி, எஸ். குமுதினி, ரி. நித்தியானந்தன், ஆர். ராகுலநாயகி, ரி. சுரேஷ்குமார். பி. தர்சினி.

### நாடகமும் அரங்கியலும்(தமிழ்)

எஸ். நிமலசங்கர், எஸ், சிவாஜினி, என். நந்தினி, பி. சுபனுதா, ரி. சசிகலா. எஸ். உமாதேவி, ஜி. வாமராணி. கே. தமயந்தி. ஏ, வாசுகி, எஸ். நளாயினி, வி. வைதேகி, ரி. ஜெசுதன், என். பபிதா, எஸ். சிவசண்முகராஜா, ரி. சுவேந்திர ராஜா.

### வரலாறு

வி. பிரபாலினி, எஸ். சிவதர்ஷினி,

### கலை

பி. சிறீதரன், கே. அமிர்தலிங்கம், வி. நந்தினி. எஸ். சுபாஸ்கரன், கே.யாழ்ராணி, கே. ஆனந்த பவானி, ஆர். ஜி. ஏஞ்சலீனா, ரி. அருட்சோதி, வி. பாக்கியவதனி. வி. ராஜதுரை, எஸ். சிறீதரன். ஜி. விஜவாணி, எஸ் நந்தசீலன், எஸ். ஜெமீலடா, எம். பேர்னாட் ரமேஸ், பி. கிறிஸ்ரீனா, எம். ஜோன் அகஸ்ரின்.

### கிஸ்றிதவ நாகரிகம்

எஸ். ஆர். பாபு, வி. ஜே. எஸ். குமார், ஜே. ஜே. மஞ்சுளா, ஏ. எவ். ரத்னகுமார், ஏ. அனித்தா ராஜினி, எவ். ஜே. டிலாந்தி. ஏ. அகிலா, பி. எக்ஸ். ஜே. உதயராணி, ஜே. எச். ஜெனித்தா, எஸ். ஜெயக்குமார், கே. கிறிஸ்தோபர், எஸ்.கே. மஞ்சுளா, ஜே. சுபோதினி, ஆர். வாசுமதி, ஏ.ரி. அமிர்தா பி.சி. உதயபானு. கே ஜே. ஜெயதாஸ், அருட் திரு.பி.பி. லுமினா, எம். கொலன்ரீனா எஸ். ஜே. நிருஜா, சி. எஸ். ஜேஷி, எஸ். சத்திய சீலன், எஸ்.ரி.ஜே. நிலாந்தி, ஜி. பிரேமலதா. சி.வி.பி. ஜெபநேசன், ஏ. ஆர். தேவதாசன். ஏ, ஜோரஞ்சினி.

வி. யூலியஸ், வை.பி. ஆன், எம். சிவாஸ்கரன், ரி. ஆர். மதிசேகரன், ஈ. சி. ரஞ்சித்ராஜ், ஏ எஸ். சஜிமிலோனி, சி. விமலதாஸ். ஈ. நளாயினி, எஸ். நினிந்துஷா, எஸ். வி. பாஸ்கரன், ரி. இந்துமதி.

### வரலாறு

யு ஜெயதாரணி, பி. கவிதா, பி. பிரியதர்சினி.

### மொழியியல்

கே. அகிலா, ஐ. விஜயலதா, ஜி. ரேனுகா.

### சமஸ்கிருதம்

எஸ். மதிவதனி, ஆர். ஹேமமாலினி, எஸ். கோமதி.

### விவசாயம்

எஸ். கவிதா. கே. குணநாதன், கே. ராதிகா, கே. சுகந்தன், பி, யாலினி, எஸ். தர்மராஜசிங்கம், என். தயாபரன், ரி. உமா, பி. பாலசுப்பிரமணியம். (இ-3)

உ

ஓம் சக்தி



மிருசுவில்
படித்த மகளிர் குடியேற்றத் திட்டம்
துர்க்காபுரம்

## ஞானதுர்க்கை அம்மன் ஆலய அலங்கார உற்சவம்

மேற்படி தேர் உற்சவம் 9ஆம் நாள்(18 - 07 - 97) வெள்ளிக்கிழமை காலை 11-00 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் தீக்குளிப்பு வைபமும் ஆலயத்தில் வாக்களிக்கும் தாயானவள் ஞானதுர்க்கா தேவியின் தெய்வீக அருட் கலையுடன் கூரிய வாள்களின் மேல் ஏறி நின்று துர்க்கா தேவியின் வீதியுலாவுடன் சேர்ந்து வீதியுலா வரும் காட்சியும் இடம் பெறும். அடியார்கள் இவ் விழா உற்சவத்தில் கலந்து ஞான துர்க்கையின் அருளைப் பெறுமாறு வேண்டுகின்றோம்.

சி. நவரத்தினம்
தர்மகத்தா

(48420)

உ

திருவருள் மிகு

## ஸ்ரீ பரராஜசேகர பிள்ளையார் திருக்கோயில் இணுவில்

மகாலக்ஷ்மி பூஜை, சுமங்கலி பூஜை, தீப பூஜை

## விஞ்ஞாபனம்

நிகழும் ஈசுரவருஷம் ஆடிமாதம் 3ஆம் திகதி (19-07-97) சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும்.

தீப பூஜை செய்ய விரும்புவோர் ஆலயத்தில் விவரங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

- உபயகாரர்கள்

(47324)

## சாயி சிந்தனை

இரத்த சோகை வந்தால், நோயை எதிர்க்கும் சக்தி பலவீனப்பட்டு, அபாயமான காய்ச்சல் முதலியன தொற்றிக் கொள்ள வாய்ப்புண்டு, அதைப்போலவே, மனிதன். கடவுள் நம்பிக்கை இழந்து விட்டால், சுய நம்பிக்கையையும் இழந்து விடுகின்றான்.

தன்னுடைய பலத்திலும் தெய்வீகத் தன்மையிலும் நம்பிக்கை இழந்து விட்டால், அந்த பலத்திற்கும் தெய்வீகத்திற்கும் ஆதாரமான கடவுள் நம்பிக்கையை இழந்துவிடுகிறான். அதன் பயனாக தற்பெருமை, வெறுப்பு, பொறாமை போன்ற கடும் நோய்வாய்ப்பட்டு மனச் சாந்தியைப் பறிகொடுத்து விடுகிறான்.

நம்பிக்கையின்மை என்ற சோகை வருத்தத்திலிருந்து தப்புவதற்கு நாமஸ்மரணை அப்பியாசம் செய்யுங்கள்; வேதங்களைப் படியுங்கள்; வசீகரமுள்ள உலகத்தின் அநித்தியத்தைப் பற்றிச் சிந்தியுங்கள்.

எல்லாம் சாம்பராக முடியும்—அணியும் நெற்றி உட்பட -என்ற அடிப்படையான ஆன்மீக போதனையை சுட்டிக் காட்டுவதற்குத் தான் நீங்கள் விபூதியை உங்கள் நெற்றியில் அணிகின்றீர்கள்.

[ஆதாரம்: Satya Sai Speaks]

## பாடசாலைத் தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் இன்று காலை 9 மணிமுதல் பாடசாலைத் தின நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. அருட்திரு. ஜேம்ஸ் அடிகளின் திருப்பலி நிறைவேற்றத்துடன் நிகழ்ச்சிகள் இடம்பெறும். (ஐ)

## புவியியல் பாட செய்முறை

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். வலயம்-2 பாடசாலைகளில் ஜி சீ.ஈ. உயர்தர வகுப்பில் புவியியல் கற்கும் மாணவர்களுக்கான செய்முறைப் பட்டறை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ)

வலி - மேற்கில்

## 100 விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கை உதவி

நவாலி, ஜூலை 17

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 100 விவசாய குடும்பங்கள் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு உலக உணவு ஸ்தாபனம் உதவி வழங்கவுள்ளது.

5 குடும்பங்கள் கொண்ட 20 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிக்கும் ஒரு நீர் இறைக்கும் இயந்திரம், ஒரு தெளிகருவி மற்றும் மரக்கறி விதைகள், உரங்கள், மருந்துகள் போன்ற உள்ளீடுகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-100)

## தென்மராட்சியில் 6 மாத காலத்தில் 4 ஆயிரத்து 59 பேருக்கு மலேரியா

தென்மராட்சி ஜூலை 17

இவ் வருடம் முதல் ஆறு மாத காலப்பகுதியில் தென்மராட்சிப் பிரதேசத்தில் 21 ஆயிரத்து 539 பேர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

சாவகச்சேரி, வரணி, கைதடி, கொடிகாமம், பளை ஆகிய ஆஸ்பத்திரிகளிலும் எழுதுமட்டுவாள், தவசிகுளம் ஆகிய பிரிவுகளிலும் சிகிச்சை பெற்றோரின் எண்ணிக்கையே இதுவாகும்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 21 ஆயிரத்து 539 பேரில் 16 ஆயிரத்து 745 பேரின் இரத்தம் பரிசோதிக்கப்பட்டது. இவர்களில் 4 ஆயிரத்து 59 பேர் மலேரியாவினாலும், 445 பேர் மூளை மலேரியாவினாலும் 11 பேர் கலப்பு மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களில் பெரும்பாலானோர் வன்னிப் பகுதியிலிருந்து இப் பிரதேசத்திற்கு வந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

இக் காலப் பகுதியில் இப் பகுதி ஆஸ்பத்திரிகளில் ஒரு லட்சத்து 349 பேர் சிகிச்சை பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஜூபிலி ஆண்டை ஒட்டி யாழ். மறைக்கல்வி நிலையம் நடத்தும் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் யாழ். மறைக் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளன. (ஐ)

## பங்கீட்டு அட்டைக்கு மண். எண்ணெய்

தென்மராட்சிப் பகுதி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களைக் கடைகளில் உணவுப் பொருள்கள் மண்ணெண்ணெய் ஆகியவை பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படுகின்றன. அரிசி, மா, சீனி மற்றும் மண்எண்ணெய் ஆகிய பொருள்களே பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படுகின்றன. (ஐ-117)

## நெல்லியடி கல்வி நிலையம்

யாழ். வடமராட்சி முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவையில்...

**O\L PAPER CLASS**

ஆரம்பம்: 18 - 07 - 97

சனி ஞாயிறு நண்பகல் 12.00 பிற்பகல் 2.00

ஆசிரியர்கள்:- கணிதம்: திரு. யோகேந்திரன்
விஞ்ஞானம்: திரு. மனோகரராஜா.

குறிப்பு:- பாடசாலை, வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.

இடம்:- நெ. ம. ம. வி. வீதி, நெல்லிபடி.

(48429) - நிர்வாகி.

## THE SALVATION ARMY KAITHADAY

இரட்சணிய சேனை இல்லம்
கைதடி

★ கண்காட்சி ★

18 - 07 - 1997 – 19 - 07 - 1997

இரண்டு நாள்கள் நடைபெறும்.

மீண்டும் புதிய வகுப்புக்கள்:
04 - 08 - 1997 இல் ஆரம்பம்

01 - 08 - 97 இற்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

(48430) - நிர்வாகி

யா/ புன்னாலைக் கட்டுவன்
அ. த. க பாடசாலை
(17 - 07 - 97) இல்
வெள்ளிவிழாக் காணும்
அதிபர்

## உயர்திரு. சி. சிவகுமாரன்

அவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ புன்னாலைக் கட்டுவன் அ. த க. பா

(48427)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ... நூலகம்

# ஜனாதிபதி மாளிகை கட்டுமானம்: பெலவத்த பகுதி மக்கள் எதிர்ப்பு!

கொழும்பு, ஜூலை 17

கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பகுதியில் ஜனாதிபதிக்கு புதிய வாசஸ்தலம் ஒன்றை அமைப்பதற்கு காணி சுவீகரிக்கப்படுவதற்கு பெலவத்த பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இத் திட்டம் குறித்து தமக்கு போதியளவு விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை என்றும்—

தமது பகுதியில் புதிய மாளிகைக் கட்டடம் அமைக்கப்படவுள்ளதாக எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றி செய்தித்தொடர்பு சாதனங்கள் ஊடாக மட்டுமே தாம் தெரிந்து கொண்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மாளிகைக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்காக பெலவத்த பகுதியில் பொது மக்களின் 30 வீடுகள் வரை அடுத்த சில மாதங்களில் இடிக்கப்படவுள்ளன. அத்துடன் அப்பகுதியில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரி வளாகமும் அழிக்கப்படும் என மக்கள் அஞ்சுகின்றனர்.

இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்:

தமது குடியிருப்புகள் அழிக்கப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவித்து ஜனாதிபதிக்கும், அமைச்சர்களுக்கும் அனுப்பிவைத்த கடிதங்களுக்கு அவர்களிடம் இருந்து பதில்கள் கிடைக்கவில்லை என்று பொதுமக்கள் கூறியுள்ளனர். (ஐ-4)

## அளவெட்டி வீடுகளிலிருந்து பொருள் எடுத்துவரத் தடை!

யாழ்ப்பாணம், ஜூலை 17

அளவெட்டிப் பகுதிக்கு தமது வீடுகளைப் பார்த்து வரச் செல்பவர்கள், அங்கிருந்து திரும்பும்போது எந்த ஒரு பொருளையும் எடுத்து வரக்கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

அப் பகுதிகளுக்கு மக்களை அனுமதிக்கத் தொடங்கிய பின் அங்கு செல்பவர்களில் சிலர் ஆள்கள் இல்லாத வீடுகளிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருள்களை திருடிச் செல்வது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பலவீட்டு கூரைச்சீற்றுகள், ஓடுகள், நிலைகள், கதவுகள் போன்ற பொருள்கள் திருட்டுப் போவதாக முறைப்பாடு செய்யப்பட்டதையும் பல பொருள்கள் அங்குள்ள சில இடங்களில் மண்ணில் புதைக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டதையும் அடுத்தே அப் பகுதி கிராம சேவை அலுவலர் இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டார். அதையடுத்து இந்த முறை நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த உத்தரவை மீறி அங்கிருந்து எந்தப் பொருளையேனும் யாரும் எடுத்து வர முற்பட்டால், அப்பொருள்கள் யாவும் மல்லாகம் சந்தியில் இருக்கும் இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்படுகின்றன.

இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட விறகு, தேங்காய் போன்ற பலபொருள்கள் மல்லாகம் சந்திப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளன. [உ-15]

## படப்பிடிப்பாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

புகைப்படக் கலைஞர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கூட்ட ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-4)

## கூட்டுறவுப் பரிசோதகர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 17

கூட்டுறவுப் பரிசோதகர்களைத் தெரிவு செய்வதற்கான நேர் முகப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி திருகோணமலையிலுள்ள கூட்டுறவுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இல. 195, கோயில் வீதியிலுள்ள கூட்டுறவுத் திணைக்களத்துடன் தேசிய அடையாள அட்டையுடன் தொடர்புகொள்ளுமாறுயாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் கேட்டுள்ளார், (ஐ-4)

## பகுதிநேர விவசாயிகளுக்கும் மண்வெட்டி வழங்கக் கோரிக்கை

மீனக்குடியமர்ந்துள்ள பகுதிநேர விவசாயிகள் தமக்கும் மண்வெட்டிகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த முழுநேர, பகுதிநேர விவசாயிகள் அனைவருமே தங்கள் தொழில் உபகரணங்களை இழந்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

முழுநேரம், பகுதிநேரம் என்ற பாகுபாடு காட்டாமல் தமக்கும் மண்வெட்டிகள் வழங்கப்பட வேண்டும் என்று நவாலி விவசாய சம்மேளன நிர்வாகிகளிடம் அப்பகுதி பகுதிநேர விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நவாலி வடக்கு, நவாலி கிழக்கு, நவாலி தெற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் இருந்தும் இதுவரை 216பேர் மட்டுமே மண்வெட்டிகள் பெற விண்ணப்பித்துள்ளனர். (ஐ-15)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

பருத்தித்துறை வெற்றிவேல் மாஸ்ரர் நலன் பேணும் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் பருத்தித் துறை பூதராயர் கோயில் ஒழுங்கையில் உள்ள மாஸ்ரரின் இல்லத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும். (ஐ-4)

## மேலதிக படகுச்சேவை

நெடுந்தீவு, ஜூலை 17

அனலைதீவு ஐயனார் கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறையில் இருந்து முற்பகல் 11 மணிக்கு அனலைதீவுக்கான மேலதிக படகுச் சேவை நேற்று முதல் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அனலைதீவு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் சி.கணபதிப்பிள்ளை தெரிவித்தார். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை படகுச்சேவை தொடர்ந்து இடம் பெறும். (ஐ-111)

## புதனன்று மூடப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். நவீன சந்தையில் உள்ள நிலையங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து சிகையலங்கரிப்பு நிலையங்களும் வாரத்தில் புதன்கிழமையில் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நவீன சந்தை சிகையலங்கரிப்பு நிலையங்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடப்பட்டிருக்கும். (ஐ-15)

### புளொட்டின் வீரமக்கள்தின நிகழ்வாக

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தண்ணீர்த் தாங்கி திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

வீரமக்கள் தினத்தை முன்னிட்டு புளொட் அமைப்பினரால் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கி நேற்று முன்தினம் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து புளொட் அமைப்பின் தென்மராட்சி அமைப்பாளர் அன்ரன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

புளொட் அமைப்பின் பிரசாரச் செயலாளர் கிருபைராஜா அங்கு நினைவுரையாற்றினார்.

பருத்தித்துறை நகரசபை அலுவலர்கள், டாக்டர்கள் உட்பட பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். (ஐ-15)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 17

'குடும்பத்தில் முரண்பாடுகளும் தீர்வுகளும்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பாலசால் வீதியிலுள்ள 'அகவொளி' குடும்ப வளத்துணை நிலையத்தில் நடைபெறும். இதில் உளவளத்துணையாளர் எஸ். மணிவாசகன் கருத்துரையாற்றுவார். (ஐ-4)

## கிராம அலுவலர் சங்கங்களை ஓரணியில் செயற்படுத்த முயற்சி

யாழ்ப்பாணம் ஜூலை 17

யாழ் மாவட்டத்தில் தற்போது செயற்படும் கிராம சேவை அலுவலர் சங்கங்கள் இரண்டையும் ஓரணியின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக சென்ற மாதம் 28ஆம் திகதி யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கிராம சேவை அலுவலர்கள் கூட்டத்தில் புதிய கிராம அலுவலர் சங்கம் ஒன்றை அமைப்பதற்காக 15 பேர் கொண்ட செயற்பாட்டுக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்பாட்டுக் குழு ஒரு மாதத்திற்குள் பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்டி புதிய கிராம அலுவலர்கள் சங்கத்தை அமைக்கும்.

தற்போது யாழ், மாவட்ட கிராம அலுவலர்கள் சங்கம் தமிழ் பேசும் கிராம அலுவலர்கள் சங்கம் என்றபெயர்களில் இருசங்கங்கள் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ -4)

## மரக்கறித் தோட்டங்களில் இரவு வேளையில் திருட்டு

தென்மராட்சி. ஜூலை 17

மிருசுவில் வடக்கு, உசன், விடத்தற்பளை ஆகிய இடங்களில் உள்ள தோட்டங்களில் இரவு வேளைகளில் இனந்தெரியாதோரால் மரக்கறி வகைகள் திருடப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளைகளில் உரிமையாளர்கள் தோட்டங்களில் காவல் இருக்காததால் திருடர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மரக்கறி வகைகளைத் திருடிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இரவு வேளைகளில் பாதுகாப்புக்காக வேறு வீடுகளில் தங்கச் செல்வோரின் வீட்டிலுள்ள ஓடுகள் கூரைத் தகடுகளும் திருடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

### யாழ்ப்பாணக் கல்லூரிப் பரிசளிப்பு விழா:

## அன்று 6,000 மைல்களிலிருந்து வந்தனர்; இன்று 6 மைலில் இருந்துவரப் பின்னடிப்பு!

### ஆசிரியர்களின் போக்கைச் சாடுகிறார் பணிப்பாளர்

சண்டிலிப்பாய், ஜூலை 17

'அன்று அமெரிக்க மிஷனரிமார் சுமார் ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் தமது கல்விப் பணிகளை மேற்கொண்டார்கள். ஆனால் இன்று எமது ஆசிரியர்கள் தமது இடத்திலிருந்து ஆறு மைல் தூரம் சென்று பாடசாலையில் கற்பிக்க முடியாமல் இடமாற்றம் கேட்டு எமது கல்வித்திணைக்கள அலுவலகத்திற்கு வருகின்றாகள். இதனால் மாணவர்களை கல்வி — குறிப்பாக தீவகம் போன்ற இடங்களிலுள்ள மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இடமாற்றம் கேட்பவர்களின் மாணவர் நலனைப் பற்றியும் சிந்திக்கவேண்டும்.

இவ்வாறு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஸ்தாபகர் தின விழாவிலும் வருடாந்த பரிசளிப்பு விழாவிலும் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் வலயம் 1 கல்விப் பணிப்பாளர் எஸ். இரத்தினராசா குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் ஜி இராசநாயகம் தலைமையில் கடந்த மாத இறுதியில் நடைபெற்ற இவ் விழாவின் ஆரம்பத்தில் கலாநிதி ஆர். ஜி. போட்டர் பிரார்த்தனை நிகழ்த்தினார். ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த செல்வி பாரத் உஷா சுரேஸ் வரவேற்புரை நிகழ்த்தியதை அடுத்து கல்லூரி அதிபர் ஜி. இராசநாயகம் ஆண்டறிக்கையை வாசித்தார்.

கல்விப்பணிப்பாளர் இரத்தினராசா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

இக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள் பேறு பெற்றவர்கள். பாடசாலைக் கல்வியுடன் மனிதப் பண்புகளும், சமூக செயற்பாடுகளும் கொண்ட மாணவ சமுதாயம் இங்கு உருவாக்கப்படுகின்றது.

இக்கல்லூரியில் பழைய மாணவனாக இருந்த காலத்தில் என்னுடன் கூடப்படித்தவர்கள்—கற்பித்த ஆசிரியர்கள் —கல்லூரி நாள்கள் எல்லாம் மறக்க முடியாதவை. யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தில் நீண்டதொரு சிறப்பான இடம் இக் கல்லூரிக்கு இருந்து வருகின்றது.

ஆசிரியர்களின் பொறுப்பு மிகவும் சக்தி வாய்ந்தது. கல்வி கற்பித்தலுடன் திருப்தியடைந்துவிடாது மாணவ சமுதாயத்தை நல்வழிப் படுத்தி நெறி முறையிலான வர்களாக அவர்களை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடமே விடப்பட்டுள்ளது.

நாட்டுக்குத்தேவையான நற்பிரஜைகளை உருவாக்கும் பணியில் இக் கல்லூரியானது தனது பங்களிப்பை நீண்டகாலமாக நிறைவேற்றி வருவதைப் பாராட்டாமல்இருக்க முடியாது.

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு [illegible] மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் பங்கு பற்ற சுமார் 360 மாணவ மாணவியரை திருகோணமலைக்கு அனுப்பி வைப்பதற்கு மிகவும் சிரமத்துடன் செயற்பட வேண்டியிருந்தது.

உணவு மற்றும் இருப்பிட வசதி ஆகிய இரண்டையுமே அங்குள்ள கல்வியமைச்சு செய்து கொடுத்தது. ஆனால் போக்குவரத்து பெரிய பிரச்சினையாக ஒருவருக்கு சுமார் ஐயாயிரம் ரூபா வரை செலவு பிடிப்பதாக இருந்தது.

நான் [illegible]னைய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மேற்கொண்ட முயற்சியினால் இலவச கப்பல் சேவையை ஏற்படுத்திக் கொடுக்கவும் வேறு வசதிகளை செய்து கொடுக்கவும் முடிந்தது.

திருகோணமலையில் நடைபெற்ற போட்டிகளில் பல தவறுகள் ஏற்பட்டதாக இங்கு திரும்பி வந்தவர்கள் எம்மிடம் முறையிட்டுள்ளார்கள். இது பற்றி மேலிடத்தின் கவனத்துக்கு — உரிய இடத்தின் கவனத்துக்கு— தெரியப்படுத்தியுள்ளேன்.

இப்படி அவர் கூறினார்.

கல்லூரி ஸ்தாபகரான வண. டாக்டர் டானியல் பூவர் பற்றிய உரை நடைசொற்பொழிவை நான்கு மாணவர்கள் நிகழ்த்தினார்கள். திருமதி யோகேஸ்வரி இரத்தினராசா பரிசில்களை வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு மாத பருவ நல்லின பேட்டுக் கோழிக்குஞ்சு விற்பனைக்குண்டு. எம்மிடம் முன் பதிவுசெய்தோர் 20-7-97-க்கு முன் சந்திக்கவும். வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ.உ), வட்டு.கிழக்கு, சித்தன்கேணி. [48413]

கடைகளுக்கான 8'X10" இரும்பு சுருக்கு கதவு, பாலர் பாடசாலைக்கான கதிரை, மேசை நல்ல நிலைமையில் உண்டு. தொடர்பு: குஞ்சண்ணா, சில்லாலை, வல்வெட்டித்துறை.

[சி/1127]

### தவறிவிட்டது

கந்தர்மடம் சந்திக்கும், ஆரியகுளம் சந்திக்கும் இடையில் தவராசா றோஸ்மலர் ஆகிய இவரின் விசேட அடையாள அட்டையும், பெறுமதியான நகைகளும் சிறுதொகைப் பணமும் தவறவிடப்பட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். 76/2. சுண்டுக்குளி, கச்சேரி (இலங்கை செஞ்சிலுவை சங்கம் முன்பாக). (48423)

### திருத்துதல்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள், சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: R.மருதம், 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். [48263]

### ஆண்டு 6 11

ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் விசேட பெறுபேறடைய எல்லாப்பாடங்களும் வாரம் 5 மணித்தியாலங்கள் கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [48422]

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு மருந்து வகைகளை வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் அழைக்கப்படுகிறது

1. கேள்விப்பத்திரதாரர் யாழ். பல்கலைக்கழக உதவி நிதியாளர் வழங்களுடன் தொடர்பு கொண்டு பல்கலைக்கழகத்துக்குத் தேவையான மருந்து வகைப் பட்டியலை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
2. கேள்விப்பத்திரதாரர் தமது கூறு விலைப் பட்டியலை 97-07-25 காலை 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தபால் உறையில் இடது புறத்தில் யுஜே/பிஓ/08/97 என எழுதப்பட்டு நிதியாளர். யாழ். பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

- பதிவாளர்

யாழ்.பல்கலைக்கழகம்,
15 – 07 – 97
(சி-1136)

## பிற்போடப்பட்டுள்ளது

பண்ணாகம் ஸ்ரீ முருகன் இந்துசமய விருத்திச் சங்கத்தினால் 18 - 07 - 1997 அன்று நடத்தப்பட விருந்த அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பு 26 - 07 - 1997 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பண்ணாகம் விசவத்தனை முருகன் ஆலய முன்றலில் நடைபெறும். இத்தினத்திலேயே பிற்பகல் 1 மணிக்கு இச் சங்கத்தின் வெள்ளி விழாவும் நடைபெறும்.

- நிர்வாகம்

(48399)

## ஆசிரியர் வகுப்பு-1 வழிகாட்டல் கருத்தரங்கு-2

இடம்: யாழ். இந்துமகளிர் கல்லூரி.
காலம்: 19 - 07 - 97 சனிக்கிழமை
காலை 9. 00 மணி.

ஆரம்பித்து வைப்பவர்:

சு. இரத்தினராசா அவர்கள்
கல்விப் பணிப்பாளர்,
வலயம் – 1
யாழ்ப்பாணம்.

பரீட்சைக்குத் தோற்றும் சகல ஆசிரியர்களுக்கும் உதவும் நோக்கில் கல்விப்புலம் சார் நிபுணர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில்
பட்டதாரி ஆசிரியர் வாண்மை விருத்தி அமைப்பினரால் மேற்படி கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**விரிவுரையாளர்கள்:**

★ கலாநிதி சபா. ஜெயராசா
கல்விப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

★ திரு. மா. சின்னத்தம்பி
கல்விப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

★ திரு. கு. சண்முகநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்.

★ திரு. தா. அமிர்தலிங்கம்
விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்.

**GRADUATE TEACHER PROFESSIONAL DEVELOPMENT ORGANIZATION**

பா. தனபாலன்,
தலைவர்.

ஏ. சி. ஜோர்ஜ்,
செயலாளர்.

(48418)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 30 — 07 — 1948 | 17 — 06 — 1997 |

### இராசு தம்பிரத்தினம்
(சாரதி)

பாசத்தின் திருவுருவாய்
பண்பின் உறைவிடமாய்
அன்பு நெறி காட்டி எம்மை
அரவணைத்த தெய்வமே!
பாதிவழியில் எம்மைப் பரிதவிக்க விட்டு
விண்ணுலகம் சென்றனையோ?
வற்றாத கண்ணீருடன்
நாம் இங்கு வாழ்கிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 17 - 07 - 97 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
தாய், தந்தை, சகோதரி,
மருமக்கள், மைத்துனிமார்.

மு. இராசு (தந்தை)
தம்பாலை, அச்சுவேலி.
(48319)

## 6 ஆம் மாத நினைவலைகள்



### சிவஸ்ரீ பா. சுந்தவேள் குருக்கள்
(அர்ச்சகர், மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில்)

| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 22 – 07 – 1968 | 19 – 01 – 1997 |

பந்தங்கள் சொந்தங்கள் பாசம் யாவும்
பாதிவழி விட்டகலப் பிரிந்தே போனீர்
சந்ததமும் விநாயகரைப் பூசை செய்த
சால்பினரே! உமைநினையா நாளேயில்லை
இந்தவுல குந்தமக்குக் கசந்த தேனோ?
இடைநடுவில் மாயமாய் மறைந்த தேனோ!
கந்தவேள் ஐயாவே! உந்தம் ஆன்மா
கணபதியின் தாள்சேர இறைஞ்சு கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயிலடி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.
(சி/ 1132)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி

| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 22—07—1968 | 19—01—1997 |

### அமரர் சிவஸ்ரீ பாலகந்தரக்குருக்கள் கந்தவேள் குருக்கள்

(அர்ச்சகர், மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில், அங்கத்தவர், அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை.)

அன்னாரது ஆத்மா சாந்தியடைய மாவடிப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை சைவக் குருமார் சபையின்
தென்மராட்சிப் பகுதித் தலைவரும், உறுப்பினர்களும்.

(சி/1133)

## வடமாகாண புகைப்படக் கலைஞர்களுக்கான விசேட கலந்துரையாடல்

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமண்டபம்
காலம்: 18 - 07 - 1997 வெள்ளிக்கிழமை காலை 10

வடமாகாண புகைப்படக்கலையகத்தாரும், வெளிப்புறப்படப்பிடிப்பாளர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முன்னிட்டு அவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக புகைப்படக்கலைஞர்களுக்கான சங்கத்தை அமைப்பது பற்றி ஒரு கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து புகைப்படக் கலைஞர்களையும் தவறாது சமுகம் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

சு. சிவராசா
அமைப்பாளர்
(வடமாகாண புகைப்படக் கலைஞர்கள் சார்பில்)

(48411)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கல்விக்கும் தாமதமா?

ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புச் சித்தி எய்திய மாணவர்கள் — பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுவதற்கான கல்வித் தகுதி உடைய மாணவர்கள் — பல்கலைக் கழகம் புகுவதற்கு இரண்டு வருடங்களுக்கு மேலாகக் காத்திருக்க வேண்டியுள்ளது.

அதனால் அவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் இழந்து போகிறது. அதாவது படிக்க வேண்டும் என்ற ஆர்வம் குன்றிப் போகிறது. அத்தோடு உலகத்தின் வளர்ச்சியோடு சேர்ந்து ஓடக் கூடிய வளர்ச்சியையும் சந்தர்ப்பத்தையும் இழந்து வருகிறார்கள்.

குடாநாட்டு மாணவர்களுக்கு கல்வித்துறையில் ஏற்படும் பாதிப்புக்களில் இதுவும் ஒன்றாகும். இதனைக் கருத்தில் கொண்டு அவர்களின் கல்வி வளர்ச்சி பாதிக்கப்படாமல் இருப்பதற்கு வகை செய்ய வேண்டும் என்ற கருத்தை வற்புறுத்தி இருக்கிறார் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் அதிபர் எஸ். தனபாலன்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கும் கல்விச் சீர்திருத்த ஆணைக்குழு இதனைத் தனது சிந்தனைக்கு எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

போரின் காரணமாக குடாநாட்டு மாணவர்களுக்கு உண்டான கல்விப் பாதிப்புகள் நீண்ட பட்டியல் இடக்கூடியவை. உயர் கல்வி வாய்ப்பு இழப்பு உட்படக் கல்வி பயில்வதை பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் நிறுத்த நேர்ந்தது.

மேலும் ஆயிரக்கணக்கான குடாநாட்டு மாணவர்களின் கல்வி ஆண்டுகள் பின்னடைவு கண்டுள்ளன குறிப்பாக, வன்னிக்கு இடம் பெயர்ந்து இன்னும் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத மாணவர்கள் உரிய காலத்தில் பரீட்சை எழுத முடியவில்லை; உரிய வகுப்பில் சேர்ந்து பயில முடியவில்லை என்று கல்வி வருடங்களை இழந்து தவிக்கிறார்கள். இவர்கள் கல்வி இடை நடுவில் அறுக்கப்பட்டதாயிற்று.

இவ்வாறு பல வகைகளாலும் தமதுகல்வி வளர்ச்சியை இழந்தவர்கள், உரிய காலத்தில் கற்க வசதியின்றிப் பின்னடைந்தவர்கள், விரக்தி அடைந்த எதிர்காலச் சந்ததியினராக மாறும் ஆபத்து உண்டு. அதற்கு இடங்கொடாமல் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களது கல்வி இழப்புகளை ஈடு செய்வதில் கல்விப் பகுதியும் அரசும் அதி அக்கறை காட்டுவது அவசியம்.

பல்கலைக்கழக அனுமதி பெறுவதில் உள்ள தாமத நிலையை நீக்குவதற்கும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போர் காரணமாகப் பல வகைகளாலும் பாதிப்புற்று இருக்கும் குடாநாட்டு மாணவரின் கல்வி வளர்ச்சியை நிமிரச் செய்வதில் அரசு மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடந்து கொள்ளக் கூடாது. யாழ். மாணவருக்கெனச் சில விசேட திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துவது இன்றைய அவசர தேவையாகும்.

# ஆளும்கட்சி உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்க முடிவு

## சிங்கள ஆணைக்குழு முன் சாட்சியம் அளித்தாராம்

கொழும்பு, ஜூலை 17

சிங்கள ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளித்த ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயசேன ராஜகருண மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான இவர் மீதான குற்றச்சாட்டை விசாரிக்க மூவர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இரு சிரேஷ்ட அமைச்சர்கள் இடம் பெறும் இக்குழு இவர்மீதான விசாரணையை எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பிக்கவிருக்கின்றது.

இவர் தொடர்பான குற்றப்பத்திரிகையை சுதந்திரக் கட்சி செயலாளரும், அமைச்சருமான தர்மசிறி சேனநாயக்க கையளித்துள்ளார்.

தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக் குறித்து ராஜகருண கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:-

என்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதையிட்டு நான் கவலைப்படவில்லை. சிங்கள ஆணைக் குழு முன்பாக சாட்சியமளிக்க எந்தப் பிரஜைக்கும் உரிமையுண்டு. அதைப்பிழையென்று கூறமுடியாது.

வடக்கு—கிழக்கு மாகாணம் தமிழர் தாயகம் என்றும், தமிழ், முஸ்லிம் மக்களுக்கு தனிப்பிராந்தியம் வேண்டும் என்றும் சிறுபான்மையோர் பற்றியே பேசப்படுகிறது.

ஏன் பெரும்பான்மையோர் பற்றிப் பேசக் கூடாது? ஏனைய சமூகங்கள் போன்றே பெரும்பான்மை மக்களும் சலுகைகளை அனுபவிக்கின்றனர். அவர்கள் விசேட சலுகைகள் எதையும் அனுபவிக்கவில்லை என்றார்.

இவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் சுதந்திரக்கட்சி அமைப்பாளர் பதவியை அவர் இழப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

சங்கானைக் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான தொகை மதிப்பீடு தொடர்பான அறிவுறுத்தற் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சித்தன்கேணி கணேசவித்தியாலயத்தில் நடைபெறும் எனக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார் (ஐ)

## பரிசில் நாள்

சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி பரிசில் நாள் விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு அதிபர் மு. நாகேந்திரராசா தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் சு. இரத்தினராசாவும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலர் இ. கணேசனும் கலந்துகொள்வர். (ஐ-17)

# தீர்வு முயற்சியிலிருந்து கூட்டணி பின்வாங்கப் போவதில்லை

## சிவசிதம்பரம் தெரிவிப்பு

''எமது உறுப்பினர்களுக்கு கொலை அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள போதிலும், இனப்பிரச்சினைக்கான ஆக்கபூர்வமான தீர்வு முயற்சியில் இருந்து கூட்டணி விலகப் போவதில்லை''

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

ஆக்கபூர்மான அரசியல் தீர்வு காணும் எமது முயற்சிகளை துப்பாக்கிகளாலோ அல்லது கிரனேட்டுக்களாலோ மாற்ற முடியாது.

அரசு உடன் போரை நிறுத்தி பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளையும் அப்பேச்சில் பங்காளிகளாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-150)

# 2,500 பயிற்சி ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

2 ஆயிரத்து 500 பயிற்சி ஆசிரியர்கள் நிரந்தர ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று கல்வி, உயர் கல்வி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

1992 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் பயிற்சி ஆசிரியர்களாக ஏற்கனவே நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார்கள்.

இவர்களில் 2 ஆயிரத்து 500 பேர் நிரந்தரமாக்கப்படுவர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பதவி உயர்வு பெற்ற 16 கிராமசேவையாளர்

நவாலி, ஜூலை 17

யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் கிராம சேவையாளர்களில் 16 பேர் தரம் இரண்டிலிருந்து தரம் ஒன்றுக்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த நியமனம் 1-9-96 முதல் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிலிருந்து யாழ். செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பதவி உயர்த்தப்பட்டோரின் பெயர் விவரம் பின்வருமாறு:-

கே. இராசதுரை — கோப்பாய், எஸ். கே. செல்லத்துரை — கோப்பாய், எஸ். செல்வானந்தன் — கரவெட்டி, கே. அருளானந்தம் —பருத்தித்துறை, வி. கே. சண்முகநாதன்—பருத்தித்துறை, இ. சபாநாதன் — சாவகச்சேரி, பி. குமாரசாமி— சாவகச்சேரி, எஸ். தில்லையம்பலம் — சாவகச்சேரி, எம். தயாபரன்—நல்லூர், வி. சந்திரசேகரம் — நல்லூர், எஸ். பஞ்சலிங்கம்— மருதங்கேணி, ஆர். அன்ரனி — யாழ்ப்பாணம், ஜி. கணேசவேல்— யாழ்ப்பாணம், ஆர். எஸ் தெட்சணாமூர்த்தி — தெல்லிப்பளை, திருமதி எஸ். நவரஞ்சினி சங்கானை, எஸ். வைத்தியநாதன் — சங்கானை. (இ-100)

# 20 யாழ். விவசாயிகள் விமானம் மூலம் பயணம்

## தெற்கே விவசாயச் சுற்றுலா

யாழ்ப்பாணம், ஜூலை 17

தெற்கில் விவசாயச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாண விவசாயிகள் 20 பேர் நேற்று விமான மூலம் கொழும்பு பயணமானார்கள்.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 20 விவசாயிகள் இச் சுற்றுலாவில் சென்றுள்ளனர்.

மூன்று வாரம் தெற்கில் சுற்றுலா மேற்கொள்ளும் இவர்கள் அங்குள்ள விவசாய அபிவிருத்திப் பணிகளை ஆராய்வார்கள்

விவசாய திணைக்கள அதிகாரி ஒருவரும் இவர்களுடன் சென்றுள்ளார். (இ-3-100)

## திருமலையில் ஏற்பாடு செய்யப்படும்

# பொது நிகழ்ச்சிகள் குறித்து அறிவிக்க படையினர் அறிவுறுத்து

திருகோணமலை, ஜூலை 17

''திருகோணமலையில் ஏற்பாடு செய்யப்படும் பொது நிகழ்ச்சிகள் குறித்து பாதுகாப்புப்படையினருக்கு அறிவிக்கவேண்டும். அப்போது தான் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்களைத் தவிர்க்க முடியும்.''

இப்படி திருகோணமலை இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் நிகால் ஜெயக்கொடி தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட பாதுகாப்புத் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து ஆராய நேற்று திருகோணமலை செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கூட்டத்துக்கு சமுகமளிக்க வந்தவர்கள் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரை கலந்துகொண்ட பொது நிகழ்ச்சியில் அசம்பாவிதம் ஏற்பட பாதுகாப்புப் பலவீனமே காரணமாகும்.

பாதுகாப்புப் படையினருக்கு இந்த நிகழ்ச்சி குறித்து அறிவித்திருந்தால் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கும். இனி நடக்கும் பொதுநிகழ்ச்சிகள் குறித்து முன்கூட்டியே படையினருக்கு அறிவிக்க வேண்டும்.

அத்துடன் திணைக்களங்கள் மேற்கொள்ளும் புதிய திட்டங்கள் குறித்தும் படையினருக்கு அறிவித்தால் பாதுகாப்பு வழங்கப்படும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-150)

# யுனெஸ்கோ இறுதிபோட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யுனெஸ்கோ நிறுவனத்தின் ஆதரவில் யாழ். வலயம் - I பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட கட்டுரை, கவிதை, வினாவிடை இறுதிப் போட்டி முடிவுகள் வருமாறு:-

### கட்டுரைப் போட்டி

**பிரிவு - I**

1 ஆம் இடம் - ச. மகிழினி — புனித ஜோன்பொஸ்கோ.

2 ஆம் இடம் - யே. அருணோதயன் — சாவ. றோ. க. த. பாடசாலை.

3 ஆம் இடம் - செ. பிரகாசினி — கொ. இந்து ஆரம்பப் பாடசாலை.

**பிரிவு - II**

1 ஆம் இடம் - ச. டர்லின் நிரூஜா—சென். சாள்ஸ் மகா வித்தியாலயம்.

2 ஆம் இடம் - க. கலையரசி — சாவ. இந்துக் கல்லூரி.

3 ஆம் இடம் - கு. பாரதி யாழ். இந்து மகளிர் கல்லூரி.

**பிரிவு - III**

1ஆம்இடம்-எ.[illegible] — சென். பற்றிக்ஸ் கல்லூரி.

2ஆம் இடம்- எ.எமெல்டா கரோலின் — கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம்.

3 ஆம் இடம் - தே. சுபாஜினி — யாழ் புனித மரியாள் மகாவித்தியாலயம்.

**பிரிவு - IV**

1 ஆம் இடம் - நா. பத்மப்பிரியா — வேம்படி மகளிர் கல்லூரி.

2 ஆம் இடம் - வி. கிருபாகரன் — யாழ். இந்துக் கல்லூரி.

3 ஆம் இடம் - சி. கவிதா — வேலணை சேர் வை. து. ம. ம. வித்தியாலயம்.

**பிரிவு - V**

1ஆம் இடம்- ஜோ. கானப்பிரியா — வண்ணை வைத்தீஸ்வரா கல்லூரி.

2ஆம் இடம்- அ. ஜெயதீபா — உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்

3 ஆம் இடம் - அ. மேரி கரோலின் — முத்துத்தம்பி மகாவித்தியாலயம்

### கவிதைப் போட்டி

1 ஆம் இடம் - பீ சாமினி — யாழ். இந்து மகளிர் கல்லூரி.

2 ஆம் இடம் - கு. புரந்தரன் — யாழ். இந்துக் கல்லூரி.

3 ஆம் இடம் - க. மயூரதி — சாவ. மகளிர் கல்லூரி

### வினா விடைப் போட்டி

1 ஆம் இடம் - வி. துஷ்யந்தன் — யாழ். இந்துக் கல்லூரி.

2 ஆம் இடம் - ப. பிறேமலதா — சாவ. இந்துக் கல்லூரி.

3 ஆம் இடம் - ஆ காண்டீபன் — வேலணை சேர் வை. து. ம. ம. வித்தியாலயம். (இ)

## நாளை

**ஆடி 02**

வெள்ளிக்கிழமை

திதி: திரயோதசி பிற்பகல் 1.10 வரை.

நட்சத்திரம்: மூலம் முன்இரவு 11.06வரை.

பவித்திர சதுர்த்தசி

சுபநேரம்: 6 00-7.30

ராகுகாலம்: 10.30-12.00

([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவுக் கரைக்கு அப்பால்

# இந்தியப் படகு மீது துப்பாக்கிச் சூடு!

## இருவர் பலி, மூவர் நீந்திக் கரை சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 17

இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இந்திய மீனவர் படகொன்றில் இருந்த 5 மீனவர்களில் மூவர் காயமடைந்தனர். மற்றும் இருவர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

3 இலட்சம் ரூபா பெறுமதியான இவர்களின் இயந்திரப் படகும், மீன்பிடி உபகரணங்களும் கடலில் மூழ்கின.

நெடுந்தீவுக் கடற்பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 12.15 மணி அளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இராமேஸ்வரம் பாம்பன் கிராமத்தைச் சேர்ந்தவர்களான கித்தேரியா ஜான் (வயது 20) இருகுழந்தைகளின் தந்தையான அருளானந்தம் செபஸ்ரியான் (வயது 23) இரு குழந்தைகளின் தந்தையான பீற்றர் ஆனஸ்டன் (வயது 26) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

ஆரோக்கியசாமி ஜோர்ச் (வயது 20) திருக்குடும்பம் ஒஸ்டீன் (வயது 20) ஆகிய இருவருமே இறந்து விட்டதாக அஞ்சப்படுகிறது.

காயமடைந்த நிலையில் நீந்தி நெடுந்தீவுக் கரையை அடைந்த மூவரும் ஈ.பி.டி.பியின் உதவியுடன் ஊர்காவற்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலதிக சிகிச்சைக்காக பின்னர் அவர்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்

உயிர் தப்பிய மூவரும் தெரிவித்ததாவது:-

கடந்த 14 ஆம் திகதி காலை 7 மணிக்கு இராமேஸ்வரம் கரையில் இருந்து கடற்றொழிலுக்காகப் புறப்பட்டு நள்ளிரவு நெடுந்தீவை அண்மித்துக் கொண்டிருந்தோம்.

திடீரென வந்த இலங்கை கடற்படைப்படகில் இருந்து எம்மை நோக்கி தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. நாம் அனைவரும் காயமடைந்தோம்.

எமது படகும் துப்பாக்கிச் சூட்டினால் சேதம் அடைந்து நீரில் மூழ்கத் தொடங்கியது.

சுமார் 30 நிமிட நேரத்தில் படகு முற்றாக மூழ்கியதும் கடற்படையினர் அவ்விடத்தை விட்டுச்சென்றுவிட்டனர்.

அதுவரை கடற்படையினர் எமக்கு அருகே வரவில்லை.

எமது படகு நீரில் மூழ்கியதை அடுத்து ஒன்றும் செய்யமுடியாத நிலையில் நெடுந்தீவுக் கரையை நோக்கி நீந்த ஆரம்பித்தோம்.

அப்போது மற்றைய இருவரும் கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதைக் கண்டோம். நீந்திச் செல்வோம் வாருங்கள் எனக்கேட்டோம்.

அவர்கள் இருவருக்கும் முழங்கால்களில் துப்பாக்கிச் சூடு பிடித்திருந்தது.

கடலில் மிதந்து கொண்டிருந்த, மீன் சேகரிப்பதற்காகக் கொண்டு வந்த றெஜிபோமை பிடித்துக் கொண்டு நிற்கும்படியும் நாம் கரை சேர்ந்து படகு ஒன்றைக் கொண்டுவந்து அவர்களை அழைத்துச் செல்வதாகவும் தெரிவித்துவிட்டு நீந்தத் தொடங்கினோம்.

12.45 மணிக்கு நீந்தத் தொடங்கிய நாம் 3 கிலோ மீற்றரைக் கடக்க 5 மணி நேரம் போராடினோம் 5.45 மணிக்கே நெடுதீவுக்கரையை அடைந்தோம்.

கரையில் சிறிது நேரம் களைப்பாறிவிட்டு அங்கு வந்த சிலரின் உதவியுடன் ஈ.பி.டி.பியினரைச் சந்தித்து நடந்தவற்றைக் கூறி உதவி கோரினோம்.

அவர்கள் படகினை எடுத்துக் கொண்டு சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று வெறுமையாகவே திரும்பி வந்தனர்.

இப்படி அவர்களால் தெரிவிக்கப்பட்டது. (இ-15-111)

# முகாமில் ஏற்பட்ட சச்சரவில் இரு ராணுவ சிப்பாய்கள் மரணம்

யாழ்ப்பாணம் ஜூலை 17

இரு படையினருக்கிடையில் ஏற்பட்ட சச்சரவு உயிர் இழப்பில் முடிவடைந்த சம்பவம் கடந்த 14-ஆம் திகதி பலாலி-வசாவிளான் இராணுவ முகாம் ஒன்றில் இடம் பெற்றது

ஒரு சிப்பாய் மற்றவரை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும் -

அதனால் படுகாயமடைந்த இவர் உடன் பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்படும் வழியில் உயிர் பிரிந்ததாகவும் -

அதனைக் கேள்வியுற்ற அவரைச்சுட்டதாகக் கூறப்படும் சிப்பாய் உடனே தன்னைத்தானே சுட்டு மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் வெலிகமவைச் சேர்ந்த டபிள்யூ ஜே. எச். கந்தகெதரபோறால என்ற சிப்பாயே மற்றவரையும் சுட்டு விட்டு தானும் தற்கொலை செய்து கொண்டவர் ஆவார்.

உடகெதரயாப்பரட்ண என்பவரே சுடப்பட்டு மரணமானவர்.

இது தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வழக்குதாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-15)


யாழ். பேராலய

இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினால்

**கிறிஸ்தவ மீட்டல் வகுப்பு**

(புதிய பாடத்திட்டம்)

1. இலங்கைத்திருச்சபை வரலாறு— அருட்பிதா பிலேந்திரன்
2. திருச்சபை வரலாறு — திருவாளர் செளந்தரம்
3. இன்றைய உலகில் திருச்சபை — திருவாளர் வசந்தநாயகம்
4. நான்குவடிவ நற்செய்தி — அருள் ஜெபமோகம்
5. சின்னப்பரின் திருமுகங்கள் — அருட்பிதா ரவிச்சந்திரன்
6. இரட்சணிய வரலாறு — அருட்பிதா ரூபன்மரியாம்பிள்ளை
7. அப்போஸ்தலர் பணி — திருமதி மல்லிகா

வகுப்புக்கள் 18, 19 ஆம் திகதிகளில் (வெள்ளி, சனி)

இடம்: மறைக்கல்வி நடுநிலையம், யாழ்ப்பாணம்.

நேரம்:- காலை 8-30 மணிமுதல் 4-30 மணிவரை.

(48433)


# நாளை கூடுகிறது

திருமலை மாவட்டத்துக்கான புதிய நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்வது பற்றியும் —

தற்போதைய அரசியல் நிலைமைகள் பற்றியும் — ஆராய்வதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல்பீடம் நாளை கொழும்பில் கூடுகிறது.

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற பாடசாலை வைபவம் ஒன்றில் படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தங்கத்துரையின் இடத்துக்கு புதிய உறுப்பினரைத் தெரிவு செய்வதற்காக இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

## வடக்குக்கான...

(முதலாம் பக்கத் தொடர்)

புலிகளின் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பல்கள் தாக்கப்பட்ட சம்பவங்களின் பின்னர் மாஹோ கப்பல் மட்டும் கடற்படைப் பாதுகாப்புடன் பருத்தித்துறை வந்துள்ளது. பயணிகள் மற்றும் சரக்குக் கப்பல் சேவைகளை நடத்துவதற்கு தேவையான வழித்துணையை வழங்க கடற்படையிடம் போதிய வளங்கள் இல்லாததால் அரசாங்கம் செஞ்சிலுவை சர்வதேசக் குழு, அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் ஆகியவற்றின் உதவியை நாடி உள்ளது

மிசென் கப்பல், மொறாங்பொங் கப்பல் ஆகியவை தாக்கப்பட்டது, கப்பல் தடை குறித்து விடுதலைப் புலிகளால் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமையவே என்று தமிழ் அரசியல் கட்சிகள் கருதுவதாக வெரித்தாஸ் சிங்களச்சேவையில் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் பெரும் எண்ணிக்கையான மக்கள் மீளக் குடியமர யாழ்ப்பாணம் வருவதைத்தடை செய்யவே விடுதலைப் புலிகள் கடல் வழிப் பாதையைத்தடை செய்ய முயற்சிக்கிறார்கள் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப் பாதையை விடுதலைப் புலிகளே இன்னும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் யாழ்ப்பாணத்தில் உள்ள 5 லட்சம் பொதுமக்களுக்கும் 30 ஆயிரம் படையினருக்கும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் [illegible] குறிப்பிடத்தக்கது. (இ-3-5-10-21)

# கொழும்பில் தமிழர் கண்டபடி கைதாவது நிறுத்தப்பட வேண்டும்

## கூட்டணி எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 17

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறத்திலும் தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பம்பலப்பிட்டி விடுதியில் தங்கியிருந்த மாணவிகள், ஆசிரியைகள், தொழிலுக்குச் செல்லும் பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அங்கு இருந்த 27 யுவதிகள் உடுத்த உடுப்புடனேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வகையான அநாவசிய கைதுகளை நிறுத்த வேண்டும்-

இப்படி அவர் கேட்டுள்ளார். (இ-3)

# அதிகாரப் பரவலாக்கலுக்கு நீதிமன்றின் அங்கீகாரம் தேவை

## தினேஷ் குணவர்த்தனா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

"அரசின் அதிகாரப் பரவலாக்கல் நீதிமன்றத்தின் அங்கீகாரம் பெறவேண்டும். இல்லையேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவோம்."

இப்படி மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கல் நாடாளுமன்றத்துக்கு வரும் போது சாத்வீகமான அடிப்படையில் போராட்டம் நடத்துவோம்.

அதில் உள்ள சில சரத்துக்கள் நீக்கப்படும் வரை எமது போராட்டம் தொடரும் என்றார்.

"பிராந்தியங்களின் ஒன்றியம்" என மாற்றப்படுவதை தமது கட்சி எதிர்த்து குரல் கொடுக்கும் என்றும் அவர் கூறினார். (இ-3-150

# பட்ஜெட்டுக்கு முதல் தீர்வுத்திட்டம் சமர்ப்பிப்பது சாத்தியப்படுமா?

## அமைச்சர் ஜயரத்ன சந்தேகம்

கொழும்பு, ஜூலை 17

இவ்வருட வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் தீர்வுத் திட்டத்தை சமர்ப்பிப்பதென அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தீர்மானித்துள்ள போதிலும், அவ்வாறு சமர்ப்பிப்பது சிரமமானது எனத் தாம் தனிப்பட்ட முறையில் கருதுவதாக பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் காணி அமைச்சருமான டி. எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்

தீர்வுத்திட்டம் குறித்த மக்கள் கருத்துக் கணிப்பு எடுப்பது தொடர்பான திகதி இதுவரை தீர்மானிக்கப்படவில்லை எனவும்—

என்றோ ஒரு நாள் தீர்வுத்திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது ஐ.தே கட்சிக்குஅதைஎதிர்க்க முடியாத நிலை ஏற்படும் எனவும் அமைச்சர் டி. எம். ஜயரத்ன மேலும் தெரிவித்தார்.

தீர்வுத்திட்டம் குறித்து தமிழ் அரசியல் கட்சிகளிடையே இதுவரை உடன்பாடு எதுவும் எட்டப்படாவிடினும் இறுதியில் அரசுக்கு ஆதரவை வழங்குவதை விட அவர்களுக்கு வேறு மாற்று வழி இல்லை எனவும் அவர் கூறினார். (இ-10)

## செஞ்சிலுவை...

(முதலாம் பக்கத் தொடர்)

அச்சம் காரணமாக மீண்டும் சேவையை ஆரம்பிக்கமறுத்து விட்டன என்றும் அவர் கூறினார்.

கப்பல் சேவையை நடத்த உதவுவது தொடர்பாக அரசாங்கத்துடன் பேசி வருவதாக அந்த இரு அமைப்புக்களின் அதிகாரிகள் தகவல் வெளியிட்டனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழித்துணை வழங்குவதானால் கப்பல்களில் ஏற்றப்படும் பொருள்கள் தொடர்பாகவும், கப்பல் ஊழியர்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் இணக்கம் காணப்படவேண்டும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரியான ஹர்ஷத் குணவர்த்தன தெரிவித்தார்.

அதேசமயம் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குச் செல்லும் விநியோகக் கப்பல்களுக்கு வழித்துணை வழங்கும்படி அரசாங்கம் விடுத்துள்ள வேண்டுகோளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் சகலதரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முயற்சி செய்து வருவதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

"இந்த விடயம் பற்றி ஆராயப்படுகிறது. சில நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியிருப்பதால் இதற்கு சிறிதுகால அவகாசம் தேவை" என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத் துருப்புக்கள் யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதற்கு முன்பதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3-5-21-164-150)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்)

யங்களில் மக்கள் கியூ வரிசையில் நின்றதாகவும் —

இரவு முழுவதும் இதன் காரணமாக வெள்ளவத்தை அமளியாகக் காணப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-164)

## வன்னியில் அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்)

இவர்களின் இடங்களுக்கு புதியவர்கள் அனுப்பப்பட்டு வருகின்றனர். காயமடைந்தவர்களில் 43 சதவீதமான படையினர் மீளவும் போர் முனைக்குச் சென்றுவிட்டனர்.

ஆயுத தளபாட இழப்புக்களை ஈடுசெய்ய புதிய தளபாடங்கள் போர் முனைக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

தற்சமயம் நிலைகள் பலப்படுத்தப்படுகின்றன. அதன் பின்பே அடுத்த நகர்வு ஆரம்பிக்கும் —

இப்படி அந்தச் செய்தி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-3-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org